Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 90/2020** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW5** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ரவீந்திரன் |
| Father/Husband Name | : | பதினெட்டான் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2024

(எதிரி ஆஜர்.)

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் கருவேப்பில்லை காரத் தெருவில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ராஜா என்பவரை தெரியும். அவரும் கொத்தனார் வேலை பார்த்து வந்தார். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி பெயிண்ட் அடிக்கும் வேலை பார்க்கிறார். இறந்து போன ராஜா திருப்பூரில் வேலை பார்த்து வந்தார். அதற்கு முன்பு என்னிடம் கொத்தனாராக இருந்தார். இறந்து போன ராஜா விலாவில் காயம் ஏற்பட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டு நான் அங்கு சென்றேன். அங்கு இறந்து போன ராஜாவின் அம்மா மீனாட்சி, அக்கா உமா ஆகியோர்கள் அங்கு இருந்தனர். காயம்பட்ட ராஜாவிற்கு மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு

மருத்துவமனைக்கு பரிந்துரைத்திருந்ததால் அவருடன் நானும் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். காயம்பட்ட ராஜா அங்கு சேர்த்து விட்டு நான் ஊருக்கு வந்துவிட்டேன். 4 நாட்கள் கழித்து காயம்பட்ட ராஜா இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். காயம்பட்ட ராஜா எப்படி, யாரால் தாக்கி இறந்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் என்ற சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள கைரேகை மீனாட்சியுடையது. மருத்துவமனைக்கு நான் சென்றபோது போலிசார் என்னிடம் அக்கையெழுத்தை பெற்றனர். அந்த கையெழுத்து அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 19.08.2019 ம் தேதி காலை 10.30 மணியளவில் நானும், ராஜாவும் இராமநாதபுரம் ஜெகன் தியேட்டர் அருகே வேலைக்கு செல்ல நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது ஆஜர்எதிரி ராஜாவிடம் 4 மாதத்திற்கு முன்பு என்னிடம் தகராறு செய்துவிட்டு இங்கு எதுக்குடா அசிங்கமான வார்த்தைகளால் திட்டி ராஜாவை கீழே தள்ளி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை வைத்து குத்தும் போது அதை ராஜா தடுத்ததாகவும், வலது கையில் பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் பின்பு ராஜாவை குப்புற கீழே தள்ளி இத்தோடு செத்து தொலை டா என்று கீழே தள்ளி கையில் வைத்திருந்த கத்தியால் முதுகில் இடதுபுறம் குத்தியதால் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் ராஜா வலி தாங்க முடியாமல் கத்தவே நானும், ரமேஸ், சகுபர் சாதிக் மற்றும் அங்கு நின்று கொண்டிருந்தவர்கள் சத்தம்போடவும் எதிரி கத்தியுடன் அங்கிருந்து ஓடிவிட்டார் என்றும் இரத்தக்காயத்துடன் இருந்த ராஜாவை சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கூட்டிச் சென்றோம் என்றும் ராஜாவை எதிரி தாக்கியது குறித்து ராஜாவின் அம்மா கொடுத்த

புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றும் பின்னர் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.